21.01.2026

O.S.No. 26/2023

DW2– ஆறுமுகச்சாமி – த/பெ. கருப்பசாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 21.01.2026

குறுக்கு விசாரணை : ( வாதி தரப்பில்)

1. பிராது தபசில் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண்.42/1 பி. நான் குடியிருந்துவரும் வீட்டிற்கும் பிராது தபசில் வீட்டிற்கும் சுமார் 40 கி.மீ தொலைவு இருக்குமா என்றால் சரிதான். நான் விவசாயம் செய்துவருகிறேன். பிராதுதபசில் சொத்துக்கு அருகே எனக்கு சொத்து உள்ளதா எனது மகள் மாரிச்செல்விக்கு சொத்து உள்ளது. எனது மகள் மாரிச்செல்வி கடையநல்லூரில் கணவருடன் வசித்து வருகிறார்.

2. கடையநல்லூருக்கும், பிராதுதபசில் சொத்திற்கும் சுமார் 20 கி.மீ இருக்குமா என்றால் இருக்கும். மாரிச்செல்வியின் கணவர் வெளிநாட்டில் வேலை செய்துவருகிறார். மாரிச்செல்விக்கு 3 குழந்தைகள். மாரிச்செல்வி எனது மகள் என்பதை காட்டக்கூடிய எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தின் அசல் எனது மகள் மாரிச்செல்வி வசம் தான் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்ததாக இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தின் கிரையத்தொகையானது தலா செண்டுக்கு ரூ.2,06,000/– என முடிவு செய்யப்பட்டு, 8 செண்ட் கிரையம் வாங்கப்பட்டது.

4. பி.வா.சா.ஆ.7 ஆவணத்திற்கான கிரையத்தொகையை நான் கொடுக்கவில்லை என்றாலும், அதனால் தான் உண்மையான கிரைய தொகை எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணம் முத்திரைக்கட்டணத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கோடு எழுதப்பட்டதில்லை என்றால் சரிதான். நான் சொன்னவாறு கிரையத்தொகை கொடுத்திருந்தால் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் கூடுதலாக முத்திரைக்கட்டணமும், அபராதமும் செலுத்தவேண்டியிருந்திருக்கும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணத்திற்கும், எனக்கும் எந்ததொடர்பும் கிடையாது அதனால் தான் கிரையத்தொகை எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

5. பி.வா.சா.ஆ 7 ஆவணத்தில் உள்ள மாரிச்செல்வி எனது மகளே கிடையாது என்றால் சரியல்ல. அதனால் தான் எனது மகளான மாரிச்செல்வியை நீதிமன்றத்திற்கு அழைத்துவரவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ள சொத்தை நான் தான் பராமரித்து வருகிறேன். பிரதிவாதி சொல்லிதான் பி.வா.சா.ஆ 7 ஆவணத்தின் சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.

6. பி.வா.சா.ஆ.7 ஆவணத்திற்கு முன்பே எனக்கும், பிரதிவாதிக்கும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். சுமார் 20 ஆண்டுகளாக எனக்கும், பிரதிவாதிக்கும் பழக்கம். 20 ஆண்டுகள் பழக்கத்திற்காக தான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. பி.வா.சா.ஆ.7 ஆவணத்திற்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துவிவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், அதனால்தான் வழக்குசொத்திலும் அதற்குஅருகில் உள்ள சொத்திலும் என்ன பயிர் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி